# இயேசுகிறிஸ்துவின் பழைய ஏற்பாட்டு தரிசனங்கள் (பாடம்-4)

இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகில் அவதரிக்கும் முன்பு, பலமுறை கர்த்தருடைய தூதராக பழைய ஏற்பாட்டு பக்தர்களுக்குத் தரிசனமாகியுள்ளார். இவை தேவதரிசனங்கள் என அழைக்கப்படுகின்றன. திரித்துவத்தில் இரண்டாம் நபராக இருந்த இயேசுகிறிஸ்து தன்னை மக்களுக்குக் காட்டிய இந்த அவதாரங்கள், மனுவுரு கொள்வதற்கு முன்பு அவரிலிருந்த நிலை, அவர் ஆற்றிய பணி என்பவைகளை அறிந்துகொள்ள நமக்கு உதவுவதாயுள்ளது.

(அ) தரிசனத்தின் தனித்துவம்

இயேசு கிறிஸ்துவினுடைய பழைய ஏற்பாட்டு அவதாரங்கள் தனித்துவமானவை. இத்தனித்துவச் சிறப்பை அறிந்துகொள்ள இவற்றை நாம் மற்றைய தேவ வெளிப்படுத்தல்களிலிருந்து வேறுபடுத்திக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

1. இது கனவுகள், தரிசனங்கள் என்பவற்றில் இருந்து வேறுபட்டது.
2. இது இஸ்ரவேலரை வனாந்திரத்தில் வழிநடத்திய அக்கினி, மேகஸ்தம்பங் களிலிருந்து வேறுபட்டது.
3. இது உடன்படிக்கை பெட்டியின் மீது தங்கிய கர்த்தருடைய மகிமையினின்று வேறுபட்டது.
4. இது இயேசுவின் மானிட அவதாரத்தில் இருந்தும் வேறுபட்டது.

(ஆ) அவதாரத்தின் தன்மை

இயேசுகிறிஸ்துவினுடைய பழைய ஏற்பாட்டு அவதாரங்களில் அதன் தன்மை, அதன் சிறப்பை சுட்டிக் காட்டுவதாயுள்ளது.

1. அவை நிஜமாக நடைபெற்றவைகள். மானிட கற்பனைகள் அல்ல.
2. அவை தேவனிடமிருந்து ஆரம்பமாகின்றன. இரண்டு தடவைகள் மட்டுமே மனிதனின் பிராத்தனைக்கான பதிலாய் இத்தகைய அவதாரங்கள் ஏற்பட்டன. (நியா 13:8, யாத் 33:23) மற்றைய சமயங்களில், தேவனே, தன்னுடைய விருப்பத்தின்படி தான் விரும்பிய நபர்களுக்கு தன்னைக் காண்பித்தார். “மனிதன் ஒரு போதும் தேவ வெளிப்படுத்தலின் கர்த்தாவாக முடியாது.”
3. அவை வெளிப்படுத்தலின் அவதாரங்கள், தேவன் தன்னை மக்களுக்கு வெளிப்படுத்திய முறைகளில் இதுவும் ஒன்று.
4. அவை தனிப்பட்ட மக்களுக்கு கிடைத்த வெளிப்படுத்தல்களாகும்.
5. அவை தற்காலிகமான அவதாரங்களாகும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறுகிய காலத்துக்கு மட்டுமே இத்தகைய அவதார நிலை நீடித்தது.
6. ஒரே ஒரு அவதாரத்தைத் தவிர (யாக் 24:9-11) மற்றைய அனைத்தும் கண்களுக்கு புலனான அவதாரங்களாகும். அதேபோல் பேச்சுக்குரலை கேட்கக் கூடியதாயுமிருந்தது.
7. இவை பழைய ஏற்பாட்டுக்காலத்தில் மட்டுமே இடம் பெற்றன.

(இ) தரிசனமளித்தவரின் நாமம்

கிறிஸ்துவின் பழைய ஏற்பாட்டு, அவதாரங்களின் போது அவர் "கர்த்தருடைய தூதனானவர் என அழைக்கப்பட்டுள்ளார்". தூதன் என்பது அவருடைய பணியையேயன்றி தன்மையைக் குறிக்கவில்லை.

கர்த்தருடைய தூதன் எனும் நாமந்தரிக்கப்பட்டவர் "தேவன்" என பலமுறை குறிப்பிடப்பட்டுள்து. (ஆதி 16:13) தேவனே ஆகாருடன் பேசியதாக மோசே எழுதியுள்ளார். இவர் கர்த்தருடைய தூதன் என அழைக்கப்பட்டுள்ளார். (ஆதி 16:7,9-11) ஆதியாகமம் 48:15-16ல் தேவன் தூதனானவர் என்று அழைக்கப்பட்டுள்ளார். யாக்கோபோடு சொப்பனத்தில் பேசிய தூதன் தேவனே (ஆதி 31:11,13). அதேபோல் மோசேக்கு தரிசனமான கர்த்தருடைய தூதனானவர் உண்மையில் தேவனே? (யாத் 3:2-6) அதேபோல் நியாயாதிபதிகள் 6:12-14லும் இதை நாம் பார்க்கலாம்.

கர்த்தருடைய தூதனாக தன்னை வெளிப்படுத்தியவர், தன்னுடைய பெயர் யெகோவா என அறியத்தந்ததும் கவனிக்கத்தக்கது (யாத் 3:13-17, ஏசா 42:8, ஓசியா 12:4-5) தேவனுக்கு மட்டுமே தேவ பெயர் கொடுக்கப்படலாம் (ஏசா 42:8) எனவே கர்த்தருடைய தூதனானவர் தேவனாகவே இருக்கிறார்.

கர்த்தருடைய தூதனானவர் தான் தேவன் என்பதை அறிவித்துமுள்ளார். (யாத் 6:3:6, ஆதி 22:1-2,12,16-18, எபி 6:13)

கர்த்தருடைய தூதனானவர் தெய்வீக தன்மைகளை உடையவராக இருந்தார். சிருஷ்டிக்கும் செயல்திறன் மிக்கவர் (ஆதி 16:10) சகலமும் அறிந்தவர் (ஆதி 16:13, யாத் 3:7) எதிர்காலத்தை முன் அறிவிக்கக்கூடியவர் (யாத் 3:20, ஆதி 16:10-12) பாவங்களை மன்னிப்பவர் (யாத் 23:21) அவருக்கு கீழ்ப்படிவதனால் ஏற்படும் விளைவுகள் (நியா 2:1-2, ஆதி22:12) மீட்பவர் (ஆதி 48:16, யாத் 3:8) ஜெபங்களை ஏற்றுக்கொள்பவர் (ஆதி 48:15-16) வாழ்வின்மீது அதிகாரம் உடையவர் (ஆதி 22:12) அற்புதங்களை செய்பவர் (யாத் 3:2, 3:20, நியா 6:21, 13:20) பரிசுத்தமானவர் (யாத் 3:5, யோசுவா 5:14) பலிகளை ஏற்றுக்கொள்பவர் (நியா 13:19, நியா 13:23)

(ஈ) தரிசனமளித்த நபர்

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் மக்களுக்கு தரிசனம் கொடுக்கும் வண்ணமாக அவதரித்தவர் திரித்துவத்தின் இரண்டாம் நபரான இயேசு கிறிஸ்துவே.

1. புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் இவர் கிறிஸ்து என்பதை அறியத்தந்துள்ளனர் (எபி 12:18-26, 1 கொரி 10:4, எபி 11:26).
2. மக்களால் காணக்கூடிய வண்ணம் தேவனை வெளிப்படுத்துபவர் கிறிஸ்துவே. புதிய ஏற்பாட்டில் இயேசுவே தேவனை வெளிப்படுத்தியமையால் பழைய ஏற்பாட்டில் அவரே இதை செய்திருக்க வேண்டும்.
3. இயேசு மனிதனாக பிறந்தபின் இத்தகைய தெய்வீக அவதாரங்கள் இடம் பெறவில்லை. கடைசியாக நிரந்தரமாக தன்னை முழுமையான மனிதனாக வெளிப்படுத்தியமையால், இதன் பிறகு தற்காலிக அவதாரங்கள் சாத்தியப்

படாமல் போய்விட்டன. எனவே இதற்கு முன் நடைபெற்ற தற்காலிக அவதாரங்கள் இவருடையதாகவே இருக்க வேண்டும்.

4. கர்த்தருடைய தூதனும் இயேசுவும் பிதாவினால் அனுப்பப்பட்டவர்களா தலால் இருவரும் ஒருவராகவே இருக்க வேண்டும்.
5. யோவான் 1:18ன் படி பிதாவை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. எனவே பழைய ஏற்பாட்டு அவதாரங்கள் பிதாவினுடையதாயிருக்க முடியாது. பரிசுத்த ஆவியானவர் இரு தடவைகள் மட்டுமே, இயேசுவின் ஞானஸ்நானத்தின் போதும், பெந்தேகொஸ்தே தினத்திலுமே கண்ணுக்கு தெரியும் வண்ணம் தரிசனமாகினார். எனவே பழைய ஏற்பாட்டு அவதாரங்கள் இயேசுவினுடையதாகவே இருக்க வேண்டும்.

(உ) தரிசன நிலை

இயேசுகிறிஸ்துவின் பழைய ஏற்பாட்டு அவதாரங்களில் அவர் மானிட உருவில் தன்னை வெளிப்படுத்தியுள்ளார்.

1. மம்ரேயில் ஆபிரகாமுக்கு தன்னை மனிதனாக வெளிப்படுத்தல் (ஆதி 18:1-33)
2. யாக்கோபுக்குத் தன்னை ஒரு மனிதனாக வெளிப்படுத்தல் (ஆதி 32:24-32)
3. பிலேயாமுக்கு தன்னை ஒரு மனிதனாக வெளிப்படுத்தல் (எண் 22:22-35)
4. யோசுவாவுக்குத் தன்னை ஒரு மனிதனாக வெளிப்படுத்தல் (யோசு 5:13-6:5)
5. கிதியோனுக்கு தன்னை ஒரு மனிதனாக வெளிப்படுத்தல் (நியா 6:11-23)
6. மனோவாவுக்கும் அவன் மனைவிக்கும் தன்னை ஒரு மனிதனாக வெளிப்படுத்தல் (நியா 13:3:23) இத்தரிசனங்களில் மானிட செயல்கள் பலவற்றை நம்மால் நிதானிக்கக் கூடியதாயுள்ளது. மனிதனுக்குத் தன்னை வெளிப்படுத்த வேண்டுமாயின், அவர் மனுவுருவில் வந்தால் தான் அவனால் அவரை அறிந்துகொள்ள முடிகிறது. இதனால் தான் பழைய ஏற்பாட்டு அவதாரங்களின் நிலையும் மனுவுருவிலேயே அமைந்துள்ளது.

(ஊ) தரிசனத்தின் காரணங்கள்

1. தனிப்பட்ட ரீதியாகக் கண்களுக்குப் புலனாகும் வண்ணம் தன்னை வெளிப்படுத்துதல். தேவன் தன்னையும் தன்னுடைய சித்தத்தையும் வெளிப்படுத்துவதை நோக்கமாகக் இதில் கொண்டிருந்தார்.

2. தனிப்பட்ட மக்களின் தேவைகளை சந்திக்க தேவன் தன்னை இவ்வாறு வெளிப்படுத்தினார். தேவனுடைய அறிவுறுத்தல்கள், வழிநடத்துதல்கள் இதன் மூலம் மனிதருக்குக் கிடைத்ததை நாம் காணலாம்.

இதன் மூலம் தேவன் மக்களது தேவைகளை சந்தித்தார். ஆதி 3:8, 5:22, 6:9, ஆதி 18, எண் 12:8, ஆதி 16:7-13, 21:14-21

தண்டனையைப் பற்றி எச்சரிக்கவும் அல்லது அறிவிக்கவும் தேவன் இவ்வாறு வெளிப்பட்டார். (ஆதி 3:9-19, 4:9-12, 6:13-14, 18:20-33, யாத் 4:24-26, எண் 22:22-35)

மக்களைத் தைரியப்படுத்தி உற்சாகமூட்டுவதும் இதன்மூலம் நடைபெற்றுள்ளது. (ஆதி 8:15-22, 12:1-3,7, 17:1-22, 22:11-12,15-19, 26:2,24, 35:9-13).

மக்களை அழைத்து அவர்களை ஊழியத்துக்கு அனுப்பவும் தேவன் இவ்வாறு வெளிப்பட்டுள்ளார். (யாத் 3:2-6, யோசு 5:13, 6:5, நியா 6:11-31, 1 சாமு 3:10)

சில சமயம் இத்தகைய அவதாரங்கள் மூலம் மக்களுக்கு தேவ அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டன. (ஆதி 6:14-21, 7:2-3, 8:16, 9:1-17, நியா 13:3,5, 14:14)

3. தேவனுடைய சிறிது சிறிதாக வெளிப்படுத்தலை நிறைவேற்றுவதும் இந்த அவதாரங்களின் நோக்கமாயிருந்தது. தேவன் தன்னை ஒரேயடியாக வெளிப்படுத்தாமல் படிப்படியாகவே வெளிப்படுத்துபவர். அவ்வாறே செய்துள்ளார் (எபி 1:1) அதில் இம்முறையும் ஒன்று.

4. இயேசுவின் மாம்சவதாரத்தை முன்னறிவிப்பதும் இவற்றின் நோக்கமாயிருந்தது. பழைய ஏற்பாட்டு அவதாரங்களில் இயேசு மாம்சமாகவில்லை. மாறாக மனுவுருவில் வந்தார். இது ஆவியானவர் புறாவைப் போல வந்ததற்கு (லூக் 3:22) சமனானது எனவே மாம்சவதாரம் தனித்துவமானது. இதை முன்னறிவிப்பவையாக பழைய ஏற்பாட்டு அவதாரங்கள் அமைந்தது. "உருவமே தன் அடையாளமாயிருக்கிறது. இது இயேசுவின் மாம்சவதாரத்தைப் பற்றி மக்கள் மத்தியில் ஒரு எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியது.

5. பழைய புதிய ஏற்பாடுகளில் தேவனுடைய செயலை இணைப்பதாய் இவை அமைந்துள்ளன. புதிய ஏற்பாட்டிலுள்ள இயேசுவின் பணியானது அவர் ஏற்கனவே பழைய ஏற்பாட்டில் பக்தர்கள் மத்தியில் செய்த ஊழியத்தின் தொடர்ச்சியேயாகும்.

6. இயேசுவின் தேவத்துவத்தையும், தெய்வீக திரித்துவத்தையும் வெளிப்படுத்துவதும் அதன் நோக்கமாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் தேவத்துவத்தின் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் இருப்பதைக் கண்டு கொள்ளக் கூடியதாயுள்ளது. கர்த்தருடைய தூதர் தேவனாகவும் அதே சமயம் தேவனிலிருந்து வேறானவராகவும் வெளிப்பட்டுள்ளார்.. எனினும் வேறாக தன்னை வெளிப்படுத்தியவரும் தேவனே. இது தேவத்துவத்தின் பன்மை நிலையை அறியத் தருகிறது.

7. இயேசு கிறிஸ்துவைப் பற்றி முழுமையாக அறிந்துகொள்வதற்கும் இது உதவுகிறது. மாம்சாவதாரத்துக்கு முன்பு அவரது பணி, அவரது வாழ்வு பற்றி அறிந்து கொள்ளக்கூடியதாய் உள்ளது. பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் அவர் செயலாற்றியுள்ளார்.

கேள்விகள்

1. கர்த்தருடைய தூதர் என்ற இயேசுகிறிஸ்துவினுடைய பழைய ஏற்பாட்டு அவதாரத்தின் தன்மைகளை வசன ஆதாரத்துடன் கூறுக?

2. பழைய ஏற்பாட்டில் கர்த்தருடைய தூதர் என்கிற நிலையில் தரிசனமளித்தவர் நாமம் என்ன என்பதனை வசன ஆதாரத்துடன் கூறுக?
3. பழைய ஏற்பாட்டில் கர்த்தருடைய தூதர் என்கிற நிலையில் தரிசனமளித்த நபர் இயேசு கிறிஸ்து தான் என்பதை நிரூபிக்க இப்பாடத்தில் கூறப்பட்டுள்ள காரியங்களை வசன ஆதாரத்துடன் வரிசைப்படுத்திக் கூறுக?
4. கர்த்தருடைய தூதர் என்ற இயேசு கிறிஸ்துவினுடைய பழைய ஏற்பாட்டு அவதாரத்திற்கான காரணங்களை விளக்கமாக கூறுக?